[17th March 1966

(c) The existing rate of subsidised rent for units in this Industrial Estate is 10 paise per mensem per square foot.

திரு. து. ப. அழகமுத்து : இந்தத் தொழிற் பேட்டையில் உள்ள கட்டடங்களுக்கு வாடகை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதிலே தொழிலை நடத்த முடியவில்லை என்று தொழில் நடத்து பவர்கள் கூறுகிறார்கள். அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்கள் சொல்வது நியாயம் அல்ல. காரணம், எகனுமிக் ரென்ட்தான் வசூலிக்கப் படுகிறது. அதில் எவ்வளவு செலவழிக்கிறோமோ, அதிலே ஒரு பகுதிதான் சப்சிடைஸ்டு ஆக வசூல் செய்து கொண்டிருக்கிறோம். அதை விடக் குறைத்து வசூல் செய்ய முடியாது. இப்போது கொடுக்கிற சப்சிடி மூன்றில் ஒரு பங்கு அளவு இருக்கிறது. இந்த வாடகை கூட அவர்கள் கொடுக்க முடியவில்லை என்றால் அவர்கள் தொழில் நடத்த முடியாது என்றுதான் கூறவேண்டும். வெளி நாடுகளில் இந்த வாடகைக்கு இந்த மாதிரிக் கட்டடம் மட்டுமல்ல, எந்த விதமான கட்டடமும் கிடைக்காது.

திரு. எம். எஸ். மணி : இந்தத் தொழில் பேட்டையில் தொழில் நடத்த காங்கிரஸ் கட்சிக்கு யார் யார் தேர்தலுக்குப் பணம் கொடுக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படு கிறது என்ற புகார் இருப்பது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முற்றிலும் தவறான புகார். யார் தொழில் செய்ய முன் வந்தாலும், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

திரு. து. ப. அழகமுத்து : அமைச்சர் அவர்கள் 10 சத விகிதம் வாடகைதான் வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். கட்ட டம் மிகப் பெரிய அளவில் கட்டிவிட்டு அதற்கு 10 சத விகிதம் வாடகை என்று வரும்போது அதிகமாக இருக்கிறது. கட்டட அமைப்பு முறையை மாற்றி குறைந்த செலவில் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதே இரண்டு மூன்று டைப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஏ, பி, சி, டி என்று நான்கு விதமான கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. யார் யாருக்கு எந்தெந்த விஸ்தீரணம் உள்ள கட்டடங்கள் வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளலாம். இதை விடக் குறைவான செலவில் கட்டினால், ஃபாக்டரி சட்டத்திற்கு உரியதாகவும், தொழில் நடத்து வதற்குப் போதிய வசதி உள்ளதாகவும் இருக்காது.

* 319 **கேள்வி.—திரு. சீ. சிவசுப்ரமணியன் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதி லளிப்பாரா—

1965-66-ம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் தொழிற்பேட்டைகள் நிறுவும் உத்தேசம் அரசாங்கத் தின் பரிசீலனையிலுள்ளது ?

17th March 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : There is no proposal to establish an Industrial Estate in South Arcot District during 1965–66.

திரு. நா. இராசாங்கம் : தென்னுற்காடு மாவட்டத்தில் பன்ருட்டி வட்டத்தில் குறிஞ்சிப்பாடி என்ற இடத்தில் போல்ட்ஸ் அண்டு நட்ஸ் தொழிற்சாலை நடத்த டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்சிலிருந்து அரசாங்க அனுமதி கோரி வந்திருக்கிறது. அதிலே ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டதா ? எந்த இடத்தில் ஆரம்பிக்கப் படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : போல்ட் அண்டு நட்ஸ் சம்பந்தமான இந்தத் தொழிற்சாலையைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும். அந்த யூனிட்டை இரண்டு இலாகாக்களாக வைக்க முடியும். ஒன்று இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்ட் ; மற்ருென்று ஆர்.டி. & எல்.ஏ. டிப்பார்ட்மென்ட்; ஆகவே, தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : 1965-66-லே இந்த இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை ஆரம்பிக்க உத்தேசம் இல்லை என்று சொன்னுர்கள். 1966-67-ல் அதை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? எந்த இடத்தில் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்காவது திட்ட காலத்தில் வைப்பதற்கு உத்தேசம் இருக்கிறது. ஆனுல் திட்டத்தைப் பற்றி இன்னும் முடிவுகள் எடுக்கப்படாத காரணத்தால், எந்த இடம் என்று இப்போது சொல்வதற்கில்லை.

வீடு கட்டும் திட்டம்

* 320 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆயுள் இன்சூரன்ஸ் நிறுவனத்திலிருந்து வீடு கட்டும் திட்டத்திற்காக இம்மாநில அரசுக்கு 1965-66-ல் கிடைத்த கடன் தொகை எவ்வளவு ?

(இ) இத்தொகை எம்முறையில் பயன்படுத்தப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Rs. 294 lakhs (Rupees two crores and ninety-four lakhs).

(b) The total allocation of Rs. 294 lakhs of Life Insurance Corporation funds is being distributed among the Housing Agencies in the State, for implementation of the various housing schemes.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இப்போது விநியோகிக்கப்படும் பணமானது பெரும்பாலும் நகரங்களில் வீடு கட்டும் திட்டத்திற்குத்தான் விநியோகிக்கப்படுகிறது. ரூரல் ஹவுசிங் ஸ்கீமுக்கு, கிராமப்புற வீடு கட்டும் திட்டத்திற்கு இந்தக் கடன் வசதியைச் செய்து கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?